## 17. யாரையும் குறைத்து எண்ணி விடாதே!

ஒரு குளத்தில் பெரிய ஆமை ஒன்று இருந்தது.
அதற்கு வயல் வெளியில் சென்று சுற்ற ஆசை.
அதற்கு ஒரு முயல் நண்பன் இருக்கிறது.
முயலும் ஆமையுடன் வெளியே வர ஒப்புக் கொண்டது.
பல அழகானக் காட்சிகளை நண்பர்கள் பார்த்தனர்.
ஓர் இடத்தில் சிறுவர்கள் ஓடிப் பிடித்து விளையாடுவதையும் பார்த்தனர்.
”அடே நம்மால் இவர்களைப் போல ஓட முடியுமா? முடியாதே!” என்று ஆமை ஏங்கியது.
இதை உணர்ந்த முயலோ ஆமையை சீண்டிப் பார்க்க எண்ணியது.
”நமக்குள் ஓட்டப்பந்தயம் வைக்கலாமா?” என்று கேட்டது முயல்.
ஆர்வத்தால் ஆமையும் ஏற்றுக் கொண்டது.
இருவரும் போட்டியைத் தொடங்கினர்.
வெகு வேகமாய் ஓடிய முயல் சோர்ந்தது.
ஆமையைக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக் காணவே இல்லை!
”ஆமை எங்கே ஓடப் போகிறது?” என்று எண்ணி முயல் ஒரு புதரின் கீழ் படுத்துக் கொள்ள, தூங்கியும் போனது.
திடீரென சூரியனின் வெளிச்சம் படக் கண் விழித்த முயல் தன்னைத் தாண்டி வெகு தொலைவில் ஆமை சென்று போட்டியின் எல்லைக் கோட்டில் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்து வியந்தது.
தன் தவற்றை உணர்ந்து ஆமையைப் பாராட்ட ஓடிச் சென்றது.